1970 மார்ச் 12]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த ஸ்ரீ சாதன மீட்பு இல்லத்திற்காக இரண்டு கட்டடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டு, மாத வாடகையாக ரூ. 400 விதம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரைக்கும் வாடகையாக ரூ. 80,000 கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அந்த வீட்டுக்காரர் அந்த வீட்டைத் தான் வாங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக எந்தவிதமான வசதியையும் செய்து கொடுக்காத காரணத்தினுல், வீட்டுக்காரர் அந்த வீட்டை தனக்கு வேண்டும் என்று வற்புறுத்தி வந்த காரணத்தினுல், குழந்தைகளும் வரவர குறைந்துகொண்டு வருகிற காரணத்தினுல், பொருளாதார அடிப்படையில் தனியாகக் கட்டடம் கட்டப்பட்டால் அதிக லாபம் இருக்கிற காரணத்தினுலும் அந்தக் கட்டடம் கட்டப்படுகிறது.

Daya Sadan

* 348 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Vice-President of Daya Sadan presented any memorandum to the Hon. the Minister about September—October, 1969; and

(*b*) if so the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) & (இ) தயாசதனத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்காகவும் அளிக்கப்படும் பேணுதல் மானியம் 1-4-1969 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 30-ஆக உயர்த்தப்பட வேண்டும் என முறையீடு ஒன்றை அக்காப்பிலத்தின் உதவித்தலைவர் 1969 அக்டோபர் 28-ஆம் நாளன்று அரசுக்கு அனுப்பினுர். என்னிடமும் அந்தக் கோரிக்கை மனுவைத் தந்திருக்கிறுர்கள். இந்த வேண்டுகோள் அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தயாசதனத்தின் உதவித் தலைவர் சங்களிடம் அளித்த அந்த வேண்டுகோளின் பேரில் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : ஏற்கனவே இது மாதிரி இருப்பவர்களுக்கு ஒருவருக்குரிய பேணுதல் மானியத்தொகை ரூ. 15 ஆக இருக்கிறது. இந்த இல்லத்திற்கு ஒரு ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய்க்குமேல் இப்பொழுது மானியத் தொகையாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ரூ. 5 அதிகப்படுத்தினுல்கூட, ஆண்டுக்கு ரூ. 36,000 அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அவர்களுக்கு அனுதாபமான முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தயாசதனத்தில் வந்து சேர்ந்திருப்பவர்கள் யார்? இதில் சேருவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் என்ன? யாருடைய தயவில் இங்கு வந்திருக்கிறுர்கள்?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : வயதான, உடல் நலிவுற்ற நோயுற்ற பிச்சைக்காரர்கள், உடல் நலம் குறைந்த பிச்சைக்காரர் கள், உடல்கட்டுள்ள பிச்சைக்காரர்களுக்கு வேலை செய்வதற் குரிய வாய்ப்புகளும் அங்கே இருக்கின்றன. 1954-ல் தொடங்கப் பட்டு ஏறத்தாழ 600 பேர் அந்த விடுதியில் இருந்து வருகிறுர்கள், பிச்சைக்காரர்கள், உடல் நலிவுற்றவர்கள். இது தவிர தண்டனை பெறுகிற பிச்சைக்காரர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக் கிறுர்கள். ஆக, அவர்களும் சேர்ந்து ஏறத்தாழ 600 பேர்கள் இருக்கிறுர்கள்.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, தயாசதனத் திற்குக் கொண்டுவரப்படுகிற பிச்சைக்காரர்கள் அங்கே இருக்க விருப்பம் இல்லாமல் ஓடிவிடுவதாகப் பேசப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : ஆனுல், இங்கே கொடுக் கப்பட்டிருக்கிற அந்தக் கோரிக்கை மனுவில் அதிகமாக எண்ணிக்கை இருக்கிறது, தங்களால் பராமரிக்க இயலவில்லை, தங்களுக்குக் கொடை வழங்குபவர்களும் குறைந்துபோய் விட்டார்கள், ஆகவே அரசாங்கம்தான் நிதி அதிகம் தரவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. ஆகவே, எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தயாசதனத்திற்கு யாரும் சிபார்சு செய்து அனுப்பிவைக்கிறுர்களா ? அல்லது அவர்களே வரு கிறுர்களா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து வயது வந்தோர், யாருடைய உதவியும் இல்லாமல் இருக்கிற நிலைமையில் இருக்கக் கூடியவர்களை தயாசதனத்தில் சேர்ப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : வயதானவர்களுக்கு, எந்த விதமான ஆதரவும் இல்லாதவர்களுக்கு 'ஓல்டு ஏஜ் பென்ஷன்' என்று தனியாக ரெவின்யூ இலாகாவின்மூலம் உதவி செய்கிறது. பிச்சைக்காரர்கள், உடல் நலிவுற்றவர்கள், குறிப்பாக தொழுநோ யுற்றவர்கள் ஆகியவர்கள் இந்த விடுதியில் சேர்க்கப்படுகிறுர்கள்.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that able-bodied beggars and inmates of this House are made to work and produce some commodities which are saleable in the market? What is the total amount of proceeds which we realise out of this?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்த தயாசதனம் தனி யாரால் நிறுவப்பட்டு, அதற்கென்று ஒரு குழு அமைத்து அவர்கள் இதை நடத்துகிறுர்கள். நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள் மேற்பார்வையிடுகிறுர்கள். ஆனுல், நம்முடைய அரசாங்கம் நிர்வாகம் செய்கின்ற நம்முடைய கேர் ஹோம் என்று சொல்லப் படுகிறது மேல்பாகத்தில் இருக்கிற காப்பு இல்லத்திலும், காஞ்சி புரத்தில் இருக்கிற இல்லத்திலும் நெசவு நெய்தல், அட்டைப்

1970 மார்ச் 12]

பெட்டிகள் முதலியவை தயார்செய்தல், இப்படி பல்வேறு பொருள் கள் தயார் செய்து வருகிற சிறு சிறு காட்டேஜ் இண்டஸ்டிரீஸ் என்று சொல்லப்படுகிற சிறு தொழில்களைச் செய்கிருர்கள். அது அவர்களுடைய செலவுக்கு சரிக்கட்டிப் போகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற் றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து கோவை மாவட்ட விவசாயிகளுடைய உண்ணுவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. வை சுவாமிநாதன், திரு. எம், சுரேந்திரன், திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. என். மருதாசலம் ஆகியோர் சட்டப் பேரவையின் 42-வது விதியின்கீழ் விவசாயிகளுக்கான மின் சாரக் கட்டணத்தை 8¼ காசிலிருந்து 10 காசுகளாக தமிழக அரசு உயர்த்தியிருப்பதை எதிர்த்து கோவை மாவட்ட விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு உண்ணுவிரதம் ஆரம்பித்திருப்பதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்கவேண்டும் என்று கூறியிருக்கிருர்கள்.

இது அரசாங்கத்தினுடைய அன்றாட அலுவலுக்குட்பட்டது. மேலும், உண்ணுவிரதம் இருப்பதைப்பற்றி இந்த அவை விவாதிப் பது என்பது முறையாகாது. இன்னும் மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது இதுபற்றிய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினுல், இதற்கு அனுமதி தர மறுக் கிறேன்.

(3) தகவல் கோரல்.

கூட்டுறவுத் துறை அமைச்சர்மீது எதிர்க்கட்சித் தலைவர் சாட்டியுள்ள குற்றச்சாட்டு குறித்து.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவர் அவர்களே, மூன்று நாட்களுக்கு முன்பு, சட்ட மன்றத்திலே மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனுர் அவர்கள் 85 லட்ச ரூபாய் வருமான வரி கொடுக்கவில்லை, வருமான வரி இலாகாவினர் கோர்ட்டில் வழக்குப் போட்டு இருக்கிருர்கள் என்றும், அதற்கான ஆதாரங்களைப் போதிய அளவில் தங்களிடம்